E-ISSN 2456-5571

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 6 | SPECIAL ISSUE 1 | NOVEMBER 2021 | E-ISSN: 2456-5571

சிறப்பிதழ் - வெளியீடு

**உலகத் தமிழ்ச் சங்கம்**, மதுரை

மற்றும்

**குறிஞ்சி தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்**, மதுரை

பொருண்மை

**சிங்கப்பூர்த் தமிழறிஞர் மு. தங்கராசனின்**

படைப்பாக்கங்கள்





தொகுப்பாசிரியர்கள்

முனைவர் **பா. சிங்காரவேலன்**
உதவிப் பேராசிரியர்
அரசுக் கலைக் கல்லூரி, மேலூர்

முனைவர் **ஆ. பூமிச்செல்வம்**
உதவிப் பேராசிரியர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

| | | |
|---|---|---|
| 27 | மு.தங்கராசு படைப்புகளில் பெண்ணியப் பதிவுகள் **முனைவர் ந. சங்கரநாராயணன்** | 116 |
| 28 | கவிஞர் தங்கராசனின் 'பனித்துளி' கவிதைத் தொகுப்பில் சமுதாயப் பார்வை **மா. சந்தனப்பிரியா** | 120 |
| 29 | நாட்டுப் புறப்பாடல்களில் 'அழுகை' **முனைவர் வ. சந்திரசேகர்** | 125 |
| 30 | மு.தங்கராசன் படைப்பில் உணர்வுகள் **முனைவர் ஜெ. போ. சாந்திதேவி** | 128 |
| 31 | மு.தங்கராசன் கவிதைகளில் சிந்தனைக்கூறுகள் **லெ. சாமுண்டீஸ்வரி** | 131 |
| 32 | மு. தங்கராசனின் இளையோர் நலச் சிந்தனைகள் **முனைவர் பா. சிங்காரவேலன்** | 135 |
| 33 | மணக்கும் மல்லிகையின்வழி "தூளியும் தொட்டிலும்" உணர்த்தும் உயிரூட்டமும் உணர்வாளுமையும் **முனைவர் ம. சித்ரகலா** | 142 |
| 34 | 'வாகைப்பூக்கள்' கவிதையில் சமூகம் **முனைவர் மா. சித்ரா** | 150 |
| 35 | மு. தங்கராசனின் 'எதிரொலி' நாடகத்தில் மொழி நடை **முனைவர் மு. சுகந்தி** | 155 |
| 36 | 'சிந்தனைப்பூக்கள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு - ஒரு பன்முகப்பார்வை **முனைவர் மு. சுதா** | 162 |

| | | |
|---|---|---|
| 37 | தமிழ் எங்கள் உயிர் காட்டும் மாணவர்களின் படைப்பாக்கத்திறன் **முனைவர் கோ. சுப்புலெட்சுமி** | 167 |
| 38 | மு.தங்கராசன் கவிதைகளில் சமூகச் சிந்தனைகள் **சௌ. சுருதி** | 169 |
| 39 | மு.தங்கராசனின் 'பனித்துளி' கவிதையில் புதியதோர் உலகம் **நா. செந்தில்குமார்** | 174 |
| 40 | மு.தங்கராசனின் "பனித்துளிகள்" கவித்தொகுப்பில் வெளிப்படும் பன்முகச் சிந்தனைகள் **முனைவர் மு. செந்தில்குமார்** | 177 |
| 41 | 'மாதுளங்கனி' கவிதையில் மு.தங்கராசனின் சமூகப் பார்வை **முனைவர் ம. செய்யத்காசிம்** | 182 |
| 42 | மு.தங்கராஜனின் 'உதயம்' கவிதையில் பன்முக உணர்வுச் சித்திரிப்புகள் **முனைவர் மா. செல்வத்தரசி** | 186 |
| 43 | மு.தங்கராசனின் 'மலர்க்கொத்து' சிறுகதைத் தொகுப்பில் பெண்கள் நிலை **முனைவர் ப. சு. செல்வமீனா** | 190 |
| 44 | 'கற்பனை மலர்கள்' சிறுகதை தொகுப்பில் சமுதாயப்பார்வை **செ. செல்வி** | 196 |
| 45 | மு. தங்கராசனாரின் 'பூச்செண்டு' சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள் **முனைவர் ம. டேனியல்** | 201 |

# மணக்கும் மல்லிகையின்வழி “தூளியும் தொட்டிலும்” உணர்த்தும் உயிருட்டமும் உணர்வாளுமையும்

முனைவர் ம. சித்ரகலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி

குழந்தை நலனே சமுதாய நலன். குழந்தையைப் பேணி காக்கும் நாடு நலம் பெறும். ஆனால் இன்றைய சமுதாயம் இயந்திரமயமாக மாறி விட்டது. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கக் கூட நேரம் இல்லாமல் பொருள் தேட ஓட வேண்டியுள்ளது. ஓடி பொருள் சேர்க்கலாம். குழந்தையின் ஆரோக்கியத்தைப் பெற முடியுமா...? குழந்தை தாயின் பரிசணர்வுக்கு ஏங்கும் ஏக்கத்தைப் பூர்த்தி செய்ய முடியுமா? முடியாது. அவ்வகையில் குழந்தையின் உடலுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுக்கும் மு. தங்கராசன் அவர்களின் 'மணக்கும் மல்லிகை' என்னும் சிறுகதைத்தொகுப்பில் உள்ள “தூளியும் தொட்டிலும்” என்ற கதையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தூளியும் தொட்டிலும் கதைச்சுருக்கம்

“தூளியும் தொட்டிலும்” உணர்வுகளைச் சுண்டி யிலுக்கும் ஓர் அற்புதமான கதை. தாய்ப்பால் ஊட்டுவதன் அவசியத்தை உணர்ச்சிப் பூர்வமாக உணர்த்தும் கதை. சிங்கப்பூரில் வசிக்கும் அன்புமணியின் மனைவி கனகாம்பிகை. இவர்களது மகன் செல்வநாதன். இவரின் மனைவி அன்பழகி. செல்வநாதனுக்கு முகுந்தன் என்ற மகன் இருந்ததோடு இரண்டாவதாக குழந்தை பிறக்கும் நிலையில் இருந்தாள் இவரது மனைவி. ஆக வீட்டுவேலையைச் செய்யவும் குழந்தையைப் பார்த்துக் கொள்ளவும், முகுந்தனைப் பள்ளிக்குக் கொண்டுவிடவும் ஒரு பணிப்பெண்ணை ஆறுமாதகாலம் வேலைக்கு அமர்த்தலாம் எனக் குடும்பத்தார் முடிவு செய்தனர். செல்வநாதன் முகவரிடம் ஆறுமாத காலத்திற்குப் பணிப்பெண் வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

தமிழ்நாட்டில் நடுத்தரக்குடும்பத்தில் பிறந்தவர் அழகம்மாள் என்பவர். நல்ல பண்பும் ஒழுக்கமும் உடையவராக வளர்ந்துள்ளவள். இவருடைய தந்தையார் கிளர்க்காக வேலை செய்து வருகிறார். குடும்பச் சூழலின் காரணமாக அழகம்மாள் பத்தாம் வகுப்புவரை படித்துவிட்டு அக்கம் பக்கத்தில் கிடைத்த வேலைக்குச் சென்று கொண்டிருந்தார். அந்த வேலையில் வரும் வருமானத்தை தனக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டதோடு பண்டிகை நாட்களில் பெற்றோர்களுக்கும் ஆடை வாங்கிக் கொடுப்பார். ஒருமுறை அழகம்மாள் வேலை செய்யும் ஒரு வீட்டுக்குச் சிங்கப்புரைச் சேர்ந்த முகவர் ஒருவர் வந்தார். இவர் பணிப்பெண்கள் தேவைப்படும் குடும்பங்களுக்குப் பணிப்

பெண்களை வெளி நாடுகளுக்கு விநியோகிக்கும் சென்னையைச் சேர்ந்த முகவர். இந்த செய்தி தெரிந்தவுடன் அழகம்மாள் தானும் சிங்கப்பூருக்குப் பணிப் பெண்ணாக வர விருப்பம் எனத் தெரிவித்தாள். உடனே அவர் தன்னுடைய முகவரியைக் கொடுத்ததோடு, வெளி நாடுகளில் பணி செய்ய இந்திய பாஸ்போட்டு எடுக்க வேண்டும் என்றும், எனக்கு நாற்பதாயிரம் கொடுக்க வேண்டும் என்றும், மூன்று ஆண்டுகள் வேலை செய்தால் போதும் இலட்சாதி பதியாகி விடலாம் என்றும் கூறினார். அழகம்மாளின் சிந்தனை சிறகடிக்க பெற்றோரிடம் செய்தியைச் சொல்ல, அப்பா தனது சிறிய நிலத்தைக் கொடுத்து பணம் பெற்று தன் மகளைச் சிங்கப்பூர் அனுப்பி வைக்க முடிவு செய்கிறார். அது நடக்காமல் போனது. இவரது வேலை பார்க்கும் கம்பெனியும் மாற்றலாகி விட்டதால் வேலையில்லாமல் நோய் வாய்பட்டார். அச்சமயத்தில் வேலைக்குப் பணிப்பெண் தேவைப்படுவதாக முகவர் மூலம் அழகம்மாளுக்கு அழைப்பு வந்தது. ஆனால், அழகம்மாள் குடும்பநிலையைச் சொல்லி மறுத்து விட்டதோடு அடுத்தமுறை வாய்ப்பு வந்தால் கூறுங்கள் என்றும் இப்போது உள்ள வாய்ப்பை யாருக்காது கொடுத்துவிடுங்கள் என்றும் கூறுகிறாள்.

தந்தை நோய் வாய்பட்டதால் அழகம்மாளுக்குத் திருமணத்தை வெகு விரைவாக செய்ய வேண்டும் என முடிவு செய்கின்றனர். தூரத்து சொந்தக்கார பையனைத் திருமணம் செய்து வைக்கின்றனர். அழகம்மாள் கருவுருகிறாள். அப்போது மீண்டும் சிங்கப்பூர் பணி வாய்ப்பு வருகிறது. அவளால் இப்போது செல்ல முடியாத நிலை என வருத்தத்துடன் இருந்தாள்.

மேலும், அழகம்மாள் இரண்டு அரை மாதக் கைக்குழந்தையுடன் இருக்கும் வேலையில் மீண்டும் சிங்கப்பூர் பணி வாய்ப்பு வருகிறது. அங்கம்மாள் இந்தமுறை கண்டிப்பாக போய்விட வேண்டும் என எண்ணி குழந்தையைப் பெற்றோர்களின் பொறுப்பிலும் கணவனின் பொறுப்பிலும் விட்டுவிட்டு செல்கிறாள். முகவருக்கு கொடுக்க வேண்டிய தொகையைச் சிங்கப்பூர் முகவரின் சொந்தக்காரர் செலுத்துகிறார்கள். இவள் வேலைக்குச் சென்று சிறிது சிறிதாகத் தொகையை அடைத்துக்கொள்ள வேண்டும்.

சிங்கப்பூரில் அன்புமணியின் வீட்டிற்கு அழகம்மாள் வேலைக்கு வருகிறாள். என்ன வேலை செய்ய வேண்டும் என்று சுறுசுறுப்பாக அனைத்து வேலைகளையும் செய்கிறாள். சமையலறையில் அன்பழகி தன் இரண்டாவது குழந்தைக்குப் பவுடர் பாலைக் கலக்கி கொண்டிருப்பதைப் பார்த்து திகைத்தாள். பிறகு குழந்தையை அவள் எடுத்துக்கொண்டு தனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்று தனது மார்போடு அணைத்துப் பாலூட்டினாள். இதைத் தொடந்து செய்து கொண்டிருந்தாள். இச்செயல் அவ்வீட்டில் உள்ள யாருக்கும் தெரியாது. ஒருமுறை இதை அவ்வீட்டின் தலைவி கனகாம்பிகை அம்மாள் பார்த்து விடுகிறாள். பெருமிதம் கொள்கிறாள். இது போற்றுதற்குரியது எனக் கூறி அழகம்மாளைப் பாசமாகப் பார்த்துக் கொள்கிறாள். பணிக்கான உத்தரவாதமான ஆறுமாத காலம் நிறைவடைகிறது. அழகம்மாள் வேறு இடம் வேலைக்குச் சென்று விடுகிறாள். ஆனால்,

குழந்தை அழுதுகொண்டே இருக்கிறது. குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாமல் போனதோடு குழந்தை பால் குடிக்கவும் மறுத்து அழுதுகொண்டே இருக்கிறது. குழந்தையைப் பல மருத்துவரிடம் அழைத்துச் சென்றும் நோய் சரியாகவில்லை. கடைசியாக குழந்தை நல மருத்துவ நிபுணரிடம் செல்கின்றனர். அப்போது நிபுணர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து வீட்டு நிலவரங்களைக் கேட்கிறார். கடைசியாகக் கனகாம்பிகை அம்மாள் குழந்தை அழகம்மாளிடம் பால் அருந்துவதையும் அவளிடமே அதிகம் இருப்பதையும் கூறுகிறார். நிலையைப் புரிந்த நிபுணர் குழந்தைக்கு மருந்து அந்த பணிப்பெண்தான். குழந்தை ஸ்பரிச உணர்வைத் தேடுகிறது எனக் கூறி உடனே அப்பெண்ணை அழைத்துவந்தால் மட்டுமே குழந்தை குணமாவான் என கூறுகிறார். குழந்தையின் தாயான அன்பழகியும் பெருமையுற்று அப்பெண்ணை முகவரிடம் கேட்டு மீண்டும் வேலைக்கு அமர்த்துகின்றனர். குழந்தை குணமாகிறான். வீடு குதூகலமாகின்றது.

## முகவர்களின் ஆளுமை

எந்த தொழில் செய்தாலும் அத்தொழிலின் முழு ஈடுபாடும் அத்தொழில் பற்றிய கூர்மையான அறிவும், ஆளுமையும் வேண்டும். அதேநேரத்தில் நாம் சொல்லும் சொல் பிறரின் நம்பிக்கைக்கு உரியதாகவும் பாதகமற்றதாகவும் இருந்தால் தான் ஒரு தொழிலைத் திறம்படச் செய்யமுடியும் என்பதை திருவள்ளுவர்,

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல் (குறள். 643)**

என்கிறார். தூளியும் தொட்டிலும் சிறுகதையில் வரும் முகவர் சொல்வன்மை மிக்கவர். இவர் வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களை அனுப்பும் முகவராக இருக்கிறார். அவர் நம்பிக்கை வார்த்தையோடு முன்னேற்றமுடைய ஆசை வார்த்தைகளையும் கூறுவதை "சிங்கப்பூருக்குப் பணிப்பெண்ணாக வந்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வேலை செய்தால் செலவு செய்த தொகை நாற்பதாயிரத்தையும் மீட்டுக் கொண்டு விடலாம். மேற்கொண்டு ஒரு லட்சாதிபதியாக வீடு திரும்பலாம்" (ம.ம. - தூ.தொ. ப. 65) என முகவர் ஆர்வமூட்டுவராக உள்ளார்.

## தாய்மையின் மேன்மை

பெண்மையின் வரம் தாய்மை. மனித சமுதாயம் உறவுகளால் பின்னிப்பிணைந்து இருந்தாலும் அவ்வுறவுகளில் சிறப்புப் பெற்றதாகவும் தனிச்சிறப்பு உடையதாகவும் கருதப்படுவது தாய்மை. ஆகவே தான் 'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்' என்றும் 'தாயிற் சிறந்த கோவிலுமில்லை" என்றும் தாய்மையைச் சிறப்பித்து வருகிறோம். இலக்கியங்களில் முதன்மையாகக் கருதப்படும் சங்க இலக்கியத்தில் ஆய், ஞாய், அன்னை, நற்றாய், ஈன்றாள் என்ற பெயரில் தாய் அழைக்கப்பட்டிருக்கிறாள்.

மேலும் தாய்ப்பால்தான் குழந்தையின் முதன்மையான உணவு. குழந்தை உடல் அளவிலும் மன அளவிலும் சிறப்பானதொரு வளர்ச்சியை அடைய மூலகாரணமாக இருப்பது தாய்ப்பாலே. தாய்ப்பால் இல்லாத குழந்தைக்கு எதிர்ப்பு சக்தி இல்லாமல்

போற்றப்படும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும் அவர்களின் குழந்தைக்கு தாய்ப்பால் கிடைக்கவில்லை என்றால் அது வறுமையே என்பதை,

"........ **வயிறாத் தாய்முலை யுண்ணாக் குழவியும்**

**நல்குரவு சேரபட்டார்"** **(திரி. 84: 1- 2)**

என்ற பாடல்வரி எடுத்தியம்புகின்றது. மேலும் தாய்மையின் மேன்மை என்பது குழந்தைக்குப் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பதில் நிறைந்துள்ளது என்பதையும் பால் கொடுப்பது ஒரு தாயின் கடமை என்பதையும்,

**'மலைத்தழு துண்ணாக் குழவியைத் தாயர்**

**அலைத்துப்பால் பெய்து விடல்"**

**(பழ. 212)**

என்னும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன. மேலும் இக்கருத்தை

**'உண்ண உண்ண தெவிட்டாதே – அம்மை**

**உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்"**

என்ற பாரதியாரின் பாடல் வரி உறுதிசெய்கிறது. இவ்வாறு சிறப்பிக்கப்படும் தாய்ப்பாலை, இக்கதையில் வரும் குழந்தையின் தாயான அன்பழகி கொடுக்காமல் "என் வேலைக்காரியான வெந்நீரில் பவுடர் பாலைப் போட்டு கலக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த அழகம்மாளுக்குப் வியப்பு ஒரு பக்கம், வினா ஒருபக்கம்,....! பச்சைக் குழந்தைக்குப் பவுடர் பாலா..? ஏன், ஏன் ?" (ம.ம. - தூ.தொ. ப. 70) என அழகம்மாளுக்குத் தலையே வெடித்துவிடும் போல் இருந்தது. சிறிது நேரம் கழித்துக் குழந்தையை அழகம்மாளிடம் கொடுத்தாள் அவ்வீட்டுக் குடும்பத்தலைவி, அழகம்மாள் தமிழ்நாட்டு மணம்வீசும் கிராமத்துப்பெண். தாய்மையின் புல்லரிப்பும் பரிதவிப்பையும் உடையவள். தாய்ப்பசு தன் கன்றை நினைத்து சுரந்துவரும் பாலைப்போல அழகம்மாள் குழந்தையையே பார்த்துக் கொண்டிருக்கிறாள், "தாய்ப்பால் குடிக்கும் பேறு பெறாத ஒரு குழந்தை பாவம்....! என்று சிந்தித்துக் கொண்டாளோ என்னவோ, தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறைக்குள் சென்றாள். குழந்தைக்குப் பால் கொடுத்தாள். குழந்தை ஆவல் தீரக் குடித்துக் கொண்டிருந்தது. அவளும் ஆசை தீரக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.....! ஆதங்கம் தீர்ந்தது, ஆசுவாசம் என்பது அவளுக்கு மட்டும்தானா? குழந்தைக்கும்தான்.....!" (மேலது. ப.71) என்பது குழந்தை ஆவலோடு பால் குடித்ததிலிருந்து அதன் ஏக்கத்தை உணர்ந்துகொள்ள முடிகின்றது. மேலும் வேலைக்காரப் பெண்ணான அழகம்மாளின் தாய்மை உணர்வு அவளை இங்கு தாயாகவே மாற்றியதோடு சேயின் பசியையும் ஆற்றியது. அழகம்மாளின் தாய்மையின் மேன்மை போற்றுதலுக்குரியது.

## நன்றியுணர்வும், பண்பாளுமை

நன்று என்ற சொல்லிலிருந்து நன்றி என்ற சொல் பிறக்கிறது. நல்லது என்ற சொல்லும் 'நன்றி' என்ற சொல்லிற்குரியதே ஆகும். ஒருவர், ஒருவருக்குச் செய்த நல்லதை மறத்தல் கூடாது என்பதை,

**"நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்**

**செய்தி கொன்றோர்க் குய்தி இல்லென**

**அறம்பாடிற்றே"** **(புறம். 34. 5- 7)**

என நிலம் கீழ்மேலதாக ஆவதாயிருந்தாலும் ஒருவன் செய்த நன்றியை மறக்கக் கூடாது என்னும் வரிகள் உணர்த்தி நிற்கின்றது. இதனைத் திருவள்ளுவர் “நன்றி மறப்பது நன்றன்று” என்று விளம்புகிறார். நன்றி சொல்லும் மனம் நமக்கு இருந்தால் மட்டுமே நம் உறவுகளின் பலம் மேம்படும். இங்கு கனகாம்பிகை அடுக்களையில் இருக்க குழந்தை அன்பானந்தன் அழத் தொடங்குகிறான். அழகம்மாள் அன்பாந்தனைத் தூக்கிக் கொண்டு தன் அறைக்குச் சென்று “மார்போடு அரவணைத்துக் கொண்டிருந்தாள் சற்றும் எதிர்பாராத நிலையில் அறைக்குள் நுழைந்த கனகாம்பிகையைப் பார்த்ததும் அழகம்மாள் அப்படியே ஒரு கணம் நிலை குத்திப் போனாள். அன்பானந்தனின் இதழ்க் கடையோரங்களில் பால் துளிகள் இருந்தன.” (மேலது. ப.73) அழகம்மாளுக்கு பயம் என்னை மன்னித்து விடுங்கள் என்று காலில் விழச் செல்ல, கனகாம்பிகையோ, “ஏன் எதற்கு மன்னிப்பு கேட்கிறாய்? நாங்கள் இதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே...! ஒரு பிள்ளைக்குத் தாய்ப்பால் கிடைப்பதென்றால் அது கிடைப்பதற்கு அருமையான பெரிய பாக்கியம் ஆயிற்றே! அதற்கு நாங்கள் அல்லவா உனக்கு நன்றி சொல்ல வேண்டும்” (மேலது. ப.73) என்ற நற்பண்புடையவாளாகக் கனகாம்பிகைத் திகழ்ந்தாள்.

மேலும், தாய்ப்பால் கொடுக்கும் அழகம்மாளுக்காக கனகாம்பிகை, “பால் சுறாமீன் குழம்பு, பால் சுறா கருவாட்டுக் குழம்பு கோழிரசம் என்றெல்லாம் மருத்துவப் பொருட்கள் கலந்த மசாலைக் கறி” (மேலது. ப.75) சமைத்துக் தனிச்சமையலாகக் கொடுக்கப்பட்டது. கறவை மாடு மேய்ச்சலுக்குச் சென்றால் தானே பால் கொடுக்கும் என்ற தாய்ப்பாலில் அருமை அறிந்து, பால் நன்கு ஊறும் பாரம்பரியமான மருத்துவத்தன்மையுடைய உணவுகளை அழகம்மாளுக்குக் கொடுத்துப் பாதுகாத்து வந்தாள் கனகாம்பிகை அம்மாள். இச்செயல்கள் கனம்காம்பிகையின் பண்பாட்டையும் நன்றியுணர்வையும் காட்டி நிற்கின்றன.

குழந்தையின் தாயான அன்பழகி தான் குழந்தைக்குத் தாய்ப்பால் புகட்டாதது தன் தவறு என்றும் “அன்பானந்தனுக்குத் தாய்ப்பால் கொடுத்து ஆரோக்கியமாக வளர்த்திருக்கும் அழகம்மாளுக்குத் தான் ஆயிரமாயிரம் நன்றி சொல்லக் கடமைப்பட்டவள்” (மேலது. ப.79) என எண்ணுதலே நன்றிக்குரியது எனலாம்.

### தாயின் உயிரூட்டம்

தாய் தந்தையின் உயிரணுவில் ஒரு குழந்தை உயிர் பெற்று குழந்தையாகப் பிறக்கிறது. ஆக, குழந்தைக்கு உடலும் உயிரும் கொடுத்தவர்கள் பெற்றோர்கள் எனலாம். ஆனால், அக்குழந்தையைப் பெறாமலேயே வேலைக்காரப் பெண்ணான அழகம்மாள் இக்குழந்தை புட்டிப்பால் குடிக்கக்கூடாது எனக் குழந்தை நலனின் அக்கறை கொண்டாள். அதோடு “எப்போதெல்லாம் இயலுமோ அப்போதெல்லாம் அழகம்மாள் அந்தக் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள், திருட்டுத் தனமாகத்தான்...!” (மேலது. ப.71) தசைகளின் ஸ்பரிசத்துக்கு ஃபீடிங் பாட்டில் ரப்பர் ஈடாகுமா? என்பதை உணர்வுப்பூர்வமாக உணர்த்தியுள்ளார் ஆசிரியர்.

இந்நிலையில் வேலைக்காரப் பெண்ணுக்கு வேலைக்கான உத்தரவாதக் கெடு முடிந்து அப்பெண் வேலையை விட்டுச் செல்கிறாள். ஆனால், குழந்தைக்கு அவ்வேலைக்காரத் தாயின் அன்பான அரவணைப்பும், தாய்ப்பாலும், ஸ்பரிச உணர்வும் கிடைக்காமல் பால் அருந்த மறுக்கிறது அழுகிறது. உடல்ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் குழந்தை பாதிப் படைகிறது. குழந்தையைப் பல மருத்துவரிடம் அழைத்துச் சென்றும் பலன் இல்லை. மீண்டும் குழந்தை நல மருத்துவ நிபுணரிடம் சென்றனர். அவர் குழந்தையைச் சோதித்து விட்டு அவர் உடலளவில் குறை ஏதுவும் இல்லை என்று கூறி மனதளவில் ஏதோ பாதிக்கப் பட்டிருக்கிறான் என்றார். குழந்தையின் அன்றாட பராமரிப்பை அறிய குடும்பத்தில் உள்ளவர்களைத் தனித்தனியாக விசாரித்ததில் வேலைக்காரப் பெண்ணின் அரவணைப்பில் வளர்ந்த உண்மை தெரியவே மருத்துவ நிபுணர் "குழந்தை அன்பானந்தன் கொடுத்து வைத்தவன். உங்கள் வீட்டுக்குப் பணிப்பெண்ணாக வந்த அழகம்மாள் அன்பானந்தனின் செவிலித் தாயாகவே மாறி அவனுக்குத் தானமாகத் தாய்ப்பால் ஊட்டியிருக்கின்றாள். குழந்தை மீண்டும் கலகலப்பாக இருக்க வேண்டு மென்றால் அதே அந்த வேலைக்காரப் பெண் அழகம்மாள் மீண்டும் உங்கள் வீட்டுக்குப் பணிப் பெண்ணாக வந்து முன்பு போலவே அவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். மனோதத்துவ முறைப்படி இந்த பிரச்சனைக்கு இதுதான் தீர்வு...! இது உடனடியாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். கால தாமதம் ஏற்படுமானால் குழந்தையின் ஏக்கம் அதிகரித்துப் பின் உடல்நலமும் மனநலமும் பாதிப்பதற்கு இடமுண்டு" (மேலது. ப. 78) என மருத்துவ நிபுணர் கூறினார். கருவில் குழந்தையைச் சுமந்து பெற்ற தாயைக் காட்டிலும் தாய்ப்பால் ஊட்டி அரவணைத்த செவிலியே அக்குழந்தைக்கு உயிரூட்டியவள் என்பது திண்ணம். பெற்ற தாயைக் காட்டிலும், பாலூட்டிய செவிலித்தாய் இல்லையேல் குழந்தையின் நிலை பரிதாபத்திற்குரியதாகிவிடும். ஆக, இங்கு செவிலித்தாயே குழந்தைக்கு உயிரூட்டத்தையும், உணர்வுட்டத்தையும் கொடுத்த கொடையாளியாகிறாள்.

### தாய்ப்பாலின் இன்றியமையாமை

தாய், சேய் இருவரின் உளநலன் காக்கும் ஒப்பற்ற உணவு தாய்ப்பால். தாய்ப்பால் மற்ற உணவுகளைவிட ஒரு உன்னதமான சத்துணவு ஆகும். தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, உயிர்ச்சத்து, புரதச்சத்து போன்ற சத்துக்கள் கிடைப்பதோடு பலவிதமான நோய்கள் வராமல் காப்பது மட்டுமல்லாமல் குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொடுக்கிறது. குழந்தை பிறந்து இரண்டு ஆண்டுகள் உடல், மன, மூளை வளர்ச்சி அதிவேகமாக நடைபெறும். இப்பருவத்தில் கட்டாயம் குழந்தைக்குத் தாய்ப்பால் இன்றியமையாததாக அமைவதோடு தாய் தன் மார்போடு அணைத்துப் பாலூட்டுகையில் ஒரு பாசப்பிணைப்பு உடல் ரீதியாக ஒரு ஒரு ஈர்ப்பும் ஏற்படும். இப்படி பாசப்பிணைப்போடு வளரும் குழந்தைகள் தான் நல்ல பண்புள்ள குழந்தைகளாக வளர முடியும். தாய்ப்பால் கொடுப்பதால் தாய்மார்கள் மார்பகப்புற்று நோய் போன்ற

பலவிதமான நோயிலிருந்து காக்கப் படுகின்றனர். இதனை உணராது பல தாய்மார்கள் தன் அழகு பாதிக்கப்படும் எனவும், வேலைக்குச் செல்ல தடை ஏற்படும் எனவும் தாய்ப்பால் கொடுப்பது இல்லை. ஒரு சில தாய்மார்கள் பாரம்பரிய உணவு வகைகளை விடுத்து நாகரிகமான பாஸ்ட்புட் உணவுகளை உண்பதால் தாய்ப்பால் சுரக்காத நிலையும் உள்ளது. இந்நிலை உணர்ந்த அரசு தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும் உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆகஸ்ட் முதல் நாள் தாய்ப்பால் தினமாக கடைப்பிடிக்கப்படுவதோடு தாய்ப்பால் வங்கிகளையும் ஏற்படுத்தி குழந்தைகள் நலனைக் காக்கின்றது. இதனை உணர்ந்த "சிங்கப்பூரில் தாய்சேய் மருத்துவத் துறைப்பிரிவினர் ஒரு காலக்கட்டத்தில் தாய்ப்பால் கொடுக்க வேண்டுவதன் முக்கியத்துவத்தை பற்றியும் தாய்ப்பால் கொடுப்பதனால் தங்களின் அழகும் பொலிவும் பாதிப்புறும் என்னும் அறியாமையும் பற்றி விளக்கிக் கூறி ஓர் இயக்கமே நடத்தியது. அதே சமயத்தில் தாய்ப்பால் வங்கியும் தொடங்கியது. அவையாவும் விழலுக்கு இறைத்த நீராகவே முடிந்தது. தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம் சிங்கப்பூரில் தலைதூக்கவே இல்லை. தாய்ப்பால் வங்கிக்கு வருவாரும் இல்லை. பால் தருவாரும் இல்லை." (மேலது. ப.78) என மருத்துவ நிபுணர் சிங்கப்பூரின் நிலை குறித்து வருத்தமுற்ற தன் வழி தாய்ப்பாலின் இன்றியமையாமைத் தன்மையை இக்காலகட்டத் தாய்மார்கள் உணரவில்லை என்பது புலனாகின்றது.

## பழமொழி

பழமொழிகள் ஒருசமுதாயத்தின் சிந்தனைகளுக்கும் அனுபவங்களுக்கும் களஞ்சியமாக இருப்பவை. பழமொழிகளை அறிவுப்பூர்வமாகத் தந்த இடத்தில் கையாளும் பாங்கும் அறிவு முதிர்ச்சியும் நீண்ட காலமாகப் புழக்கத்தில் வாய்மொழியாக இருந்து வரும் ஒரு வழக்காறு ஆகும். இதனை, ஆசிரியர் தனது கதையில் தகுந்த இடத்தில் தகுதியான பழமொழிகளை இட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை மெய்பிக்கும் வகையில் என்னதான் நாம் முயற்சி செய்தாலும் நமக்கு எது கிடைக்குமோ எவ்வளவு கிடைக்குமோ அதுதான் கிடைக்கும் என்பதை "ஒடம்பு நெறையா எண்ணெயைத் தேய்ச்சுக்கிட்டு மணலில் கிடந்து புரண்டாலும் ஒட்றதுதான் ஒட்டும்" என்றும், வேலையை சொல்வதற்கு முன்பே சிறப்பாகச் செய்வதை,"எள் என்றால் எண்ணெயாக் நின்றாள்" என்றும், பிறர் குழந்தையை நல்முறையில் பார்த்துக் கொண்டால் தன் குழந்தை தானாக நல்லபடியாக வளரும் என்பதை, "ஊரார் பிள்ளையைத் ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாகவே வளரும்' என்றும் ஆசிரியர் நாட்டுப்புற வழக்காறு களைக் கையாண்டுள்ளார்.

மேலும் சில நேரங்களின் இன்றியமையாத செயல்பாடுகள் ஏதேனும் வரும்போது அதில் எச்செயலை முதன்மைப்படுத்துவது என்ற சிக்கல் வரும்போது நாட்டுப்புறங்களில் "இருதலைக் கொள்ளி எறும்பாக" தவிக்கின்றனர் என்பதையும் உலக நியதிகள் "வாழையடி வாழையாகப்" பின்பற்றப்படுவதையும், நினைப்ப தெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் என்று நாட்டுப்புறங்களில் கூறுவதையும் அழகாக தன்

கதையில் கையாண்டுள்ளார். அதோடு சொல்லாமல் நாம் என்ன நினைத்தாலும் நடத்துபவன் இறைவன் என்பதை, "நினைப்பது நாம் முடிப்பது அவன்" என்றும் குழந்தை இருக்கும் இடத்தில் தெய்வம் குடியிருக்கும் என்பதை, "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்றும், சில நேரங்களில் நல்லது நடக்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினாலும் அது நடக்காமல் போவதை, "விழலுக்கு இறைத்த நீராகவே முடிகிறது" என்றும் கூறுகிறார். ஆசிரியர் மு. தங்கராசன் அவர்கள் தன்னுடைய சிறுகதையில் பழமொழிகளைப் பயன்படுத்திய விதத்தை உற்று நோக்கும்போது அவரின் நாட்டுப்புற அனுபவத்தையும் ஆளுமைத்திறனையும் அறிந்துகொள்ள முடிகிறது.

தொகுப்புரை

"தூளியும் தொட்டிலும்" குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதன் அவசியத்தை உணர்த்துகின்றது. அதோடு விலையுயர்ந்த தொட்டிலைக் காட்டிலும், உணர்வுமிக்க தூளியே (சேலைத் தொட்டிலே) சிறப்புப் பெற்றது என்றும் குழந்தை தாயின் பரிச உணர்வுகளைப் புரிந்து கொள்வதால் குழந்தைக்கு உளரீதியாக தாயின் அரவணைப்பு இன்றியமையாதது என்றும் அதுவே குழந்தையை நோயின்றி, மனநலத்துடனும், உடல் நலத்துடனும் வளர்க்கும் என்றும் இக்கதை வழி அறிய முடிந்தது. வேலைக்காரப் பெண்ணாக இருந்தாலும் தன் பேரக் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்த தாய் என மதிப்புக்கொடுத்து அப்பெண்ணிடம் நன்றியுணர்வுடன் நடந்து கொண்ட பெரியோர்களின் பாங்கு பாரம்பரிய பண்பாட்டை உலகுக்கு எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகிறது